MT

9 - ஆம் வகுப்பு

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## சமூக அறிவியல்

IX - E

நேரம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 100

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 14 X 1 = 14

1. வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய கால கட்டம் ............. .
அ) பழைய கற்காலம் ஆ) இடை கற்காலம் இ) புதிய கற்காலம் ஈ) பெருங்கற்காலம்
2. சிந்து வெளி மக்கள் இழந்த மெழுகு செயல் முறையை அறிந்திருந்தார்கள் என்பதை தெரிவிக்கும் வெண்கல சிலை ............ .
அ) ஜாடி ஆ) மதகுரு அல்லது அரசன் இ) பறவை ஈ) நடனமாடும் பெண்
3. சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை .......... .
அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி இ) தமிழ் - பிராமி ஈ) கிரந்தம்
4. மகாவீரரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மகத அரசர் ............ .
அ) தனநந்தர் ஆ) சந்திரகுப்தர் இ) பிம்பிசாரர் ஈ) சிசுநாகர்
5. கிரேக்கர்களின் மற்றொரு பெயர் ................. .
அ) ஹெலனிஸ்டுகள் ஆ) ஹெலனியர்கள் இ) பீனிசியர்கள் ஈ) ஸ்பார்ட்டர்கள்
6. i) பட்டு வழித்தடம் ஹன் வம்ச ஆட்சியின்போது மூடப்பட்டது.
ii) வேளாண் குடிமக்களின் எழுச்சி, ஏதேனிய குடியரசுக்கு அச்சத்தைக் கொடுத்தது.
iii) விர்ஜில் எழுதிய `ஆனெய்ட்' ரோம ஏகாதிபத்தியத்தைப் புகழ்வதாய் அமைந்தது.
iv) ஸ்பார்ட்டகஸ், ஜூலியஸ் சீஸரைக் கொன்றார்.
அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (ii) மற்றும் (iv) சரி ஈ) (iii) சரி
7. **கூற்று :** மெசபடோமிய நாகரிகத்தின் அஸிரியர்கள் சிந்துவெளி நாகரிகத்தின் சமகாலத்தவர் ஆவர்.
**காரணம் :** அஸிரிய ஆட்சியாளரின் ஆவணம் ஒன்று மெலுஹாவிலிருந்து வந்த கப்பல்கள் பற்றி கூறுகின்றது.
அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது
ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்றும் காரணமும் தவறானவை
8. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்தியா .................... கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
அ) கோண்டுவானா ஆ) லொரேசியா இ) பாந்தலாசா ஈ) அங்காரா
9. பாறைகளின் சிதைவுறுதலும், அழிதலும் ............., என்றழைக்கப்படுகிறது.
அ) வானிலைச் சிதைவு ஆ) அரித்தல் இ) கடத்துதல் ஈ) படியவைத்தல்
10. .................. புயலின் கண் என்று அழைக்கப்படுகிறது.
அ) அழுத்தம் ஆ) காற்று இ) சூறாவளி ஈ) பனி
11. குடவோலை முறையை பின்பற்றியவர்கள் ..............
அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள் இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள்
12. கீழ்க்கண்ட நாட்டின் தேர்தல் முறையினை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது
அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து இ) கனடா ஈ) ரஷ்யா
13. இந்தியாவில் அதிகபட்ச சூரிய ஆற்றல் உற்பத்தி செய்யும் மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) மேற்கு வங்காளம் இ) கேரளா ஈ) ஆந்திர பிரதேசம்
14. பின்வருவனவற்றுள் எது இரண்டாம் துறையை சார்ந்ததல்ல?
அ) கட்டுமானம் ஆ) உற்பத்தி இ) சிறுதொழில் ஈ) காடுகள்

**II ஏதேனும் பத்து வினாக்களுக்கு குறுகிய விடையளி. 25 கட்டாய வினா.** 10 X 2 = 20

15. கருவி செய்வதில் கீழ்ப் பழைய கற்கால மக்களிடமிருந்த தொழில் நுட்பத்தை திறனாய்வு செய்க.
16. ஹமுராபி சட்டத் தொகுப்பு முக்கியமான சட்ட ஆவணமாகும். ஏன்?
17. சங்ககாலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் எந்தளவு ஒரு முக்கியமான சான்றாக உள்ளது?
18. மும்மணிகள் (திரிரத்னா) இச்சொல்லை விளக்குக.



Scanned with CamScanner

www.padasalai.Net

19. புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.
20. புவியின் நான்கு கோளங்கள் பற்றி சுருக்கமாக எழுதுக.
21. `வானிலைச் சிதைவு' - வரையறு.
22. காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
23. `நீரியல் சுழற்சி' என்றால் என்ன?
24. `உயிரினப் பன்மை' என்றால் என்ன?
25. போக்ஸோ (POCSO) வரையறு.
26. அரசியல் கட்சி என்பதன் பொருள் யாது?
27. பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?
28. `மேம்பாடு' என்பதற்கு நீங்கள் என்ன பொருள் கொள்வீர்கள்?

**III எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி. 42-கட்டாய வினா.** 10 X 5 = 50

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
    1. கைக்கோடாரிகளும், வெட்டுக்கருவிகளும் ........ பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும்.
    2. ....... என்பது மனிதத்தலையும், சிங்க உடலும் கொண்ட கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும்.
    3. புவி அதிர்வு உருவாகும் புள்ளி ................ .
    4. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் .................. .
    5. மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தலைமையகம் ................ .
30. சிந்துவெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிஷங்கள் விவரி.
31. சங்ககாலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின.
32. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1) வாக்குரிமை | - | சீனா |
| 2) ஒரு கட்சி ஆட்சி முறை | - | 18 |
| 3) கவசம் | - | எகிப்திய அரசர் |
| 4) கல்லிலும், எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் | - | சிமா |
| 5) பாரோ | - | வீனஸ் |

33. சமண புத்த சமயக்கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை அறிக.
34. எரிமலைகளால் உண்டாகும் விளைவுகள் யாவை?
35. வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.
36. அரசியல் கட்சியின் செயல்பாடுகள் யாவை?
37. 1) புதுப்பிக்கத்தக்க / புதுபிக்கதகாத வளம் வேறுபடுத்துக.
    2) விலகும் எல்லை / இணையும் எல்லை வேறுபடுத்துக.
    3) காரணம் : தீப்பாறைகளை முதன்மை பாறைகள் அல்லது தாய்ப்பாறைகள் என்றழைக்கப்படுகின்றன.
38. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
39. அடிப்படை உரிமைகளையும், கடமைகளையும் விளக்குக.
40. விவரி : முதன்மைத்துறை, இரண்டாம் துறை, சார்புத்துறை.
41. ஏதேனும் ஐந்து சுற்றுச்சூழல் சட்டங்களையும் செயல்களையும் விவரி.
42. **உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.**
    1) இந்தியப் பெருங்கடல் 2) ஐரோப்பா 3) ஆர்டிக் பெருங்கடல் 4) ஆஸ்திரேலியா 5) கனடா

**IV பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 X 8 = 16

43. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும். - உறுதிபடுத்துக. ***(அல்லது)***
    சூழ்நிலை மண்டலத்தின் செயல்பாடுகள் விவரி.
44. **உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.**
    1) பசிபிக் நெருப்பு வளையம் - 1 2) செயல்படும் எரிமை - 1 3) ஆல்ப்ஸ் மலை 4) காவிரி டெல்டா 5) வெப்பபாலைவனம் 6) கிரீன்லாந்து 7) ஆசியா 8) அட்லாண்டிக் பெருங்கடல் ***(அல்லது)***
    1) இமயமலை 2) புவி அதிர்ச்சி மண்டலம் 3) சகாராபாலைவனம் 4) பசிபிக்பெருங்கடல் 5) எகிப்து 6) சீனா 7) சுந்தரவன டெல்டா 8) உறங்கும் எரிமலை ஒன்று.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

Scanned with CamScanner